**அக்டோபர் – 01**

# TNPSC துளிகள்

- மன்னார் வளைகுடா பகுதியில் நிகழ்ந்த உயிரியல் வளங்கள் குறித்த ஆய்வின் போது 62 புதிய இனங்கள் மற்றும் 77 புதிய பாறை ஒட்டுப் பகுதிகள் சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
    - இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மொத்த இனங்கள் 4,285 ஆகும்.
- மத்திய குடிமைப் பணிகள் (ஓய்வூதிய) விதிகளின் அடிப்படை விதி 56 (J) இன் கீழ் ஊழல் மற்றும் பிற குற்றச்சாட்டுகள் தொடர்பாக மேலும் 15 மூத்த வரித் துறை அதிகாரிகளுக்கு மத்திய நேரடி வரி வாரியம் (Central Board of Direct Taxes - CBDT) கட்டாயமாக ஓய்வு அளித்துள்ளது.
- 23 வயது அமெரிக்கரான கிறிஸ்டியன் கோல்மன் என்பவர் தோஹாவில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டியின் 100 மீட்டர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- பெல்ஜியத்தின் கென்ட்டில் நடைபெற்ற டூர்னோய் செயற்கைக்கோள் போட்டியில் (உலக அளவில்) மகளிர் செபர் தனிநபர் பிரிவில் இந்திய வாள் வீச்சு வீரரான (ஃபென்சர்) பவானி தேவி வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## மொத்த சேர்க்கை விகிதத்தில் மூன்றாவது இடம்: தமிழ்நாடு

- உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதத்தின் (Gross Enrolment Ratio - GER) அடிப்படையில் நாட்டில் உள்ள பெரிய மாநிலங்களிடையே சிறப்பாகச் செயல்படும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகின்றது.
- GER ஆனது 18 - 23 வயதுக்கு உட்பட்டவர்களுக்காகக் கணக்கிடப்படுகின்றது.
- உயர் கல்வி குறித்த அகில இந்தியக் கணக்கெடுப்பு 2018-19இன் சமீபத்திய அறிக்கையின் படி, தமிழ்நாட்டின் GER விகிதம் 49% ஆக உள்ளது.
- அனைத்துப் பிரிவுகளிலும் சிறந்து விளங்கும் மாநிலம் / ஒன்றியப் பிரதேசம் : சிக்கிம் (53.9%), சண்டிகர் (50.6%).

### *தமிழ்நாட்டின் தனித்துவமான நிலை*

- தமிழ்நாட்டில் GER ஆனது 6 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 8.6% அதிகரித்துள்ளது.
- உயர் கல்வியில் GER ஆனது கேரளாவில் 37 சதவிகிதமாகவும் ஆந்திராவில் 32.4 சதவிகிதமாகவும் தெலுங்கானாவில் 36.2 சதவிகிதமாகவும் கர்நாடகாவில் 28.8 சதவிகிதமாகவும் இருக்கின்றது.
- மகாராஷ்டிரா மற்றும் குஜராத் போன்ற மாநிலங்கள் GER இல் 32% மற்றும் 20.4%ஐக் கொண்டுள்ளன.
- 2030 ஆம் ஆண்டிற்குள் உயர் கல்வியில் 50% GERஐ அடைய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- ஆனால் தமிழ்நாடு ஏற்கனவே இந்த இலக்கை அடைந்துள்ளது.
- தமிழ்நாட்டில் ஆண்கள் GER விகிதமானது 49.8 சதவிகிதமாகவும் பெண்கள் விகிதம் 48.3% சதவிகிதமாகவும் உள்ளது.
- இதேபோல் மாநிலத்தில் பட்டியலிடப்பட்ட வகுப்பினரின் GER விகிதமானது 41.6 சதவிகிதமாகவும் பட்டியலிடப்பட்ட பழங்குடியின வகுப்பினரின் GER விகிதமானது

37.8 சதவிகிதமாகவும் உள்ளது.

## மதுரை மாணவர் ஐ.நா. மன்றத்தில் உரை

- அக்டோபர் 1 முதல் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் ஆணைய சமூக மன்றத்தில் கலந்து கொள்ள மதுரையைச் சேர்ந்த சட்டத் துறை ஆர்வலரான இருபத்தொரு வயது நிரம்பிய பிரேமலதா தமிழ்செல்வன் அழைக்கப்பட்டுள்ளார்.
- அவர் நடித்த 2012 ஆம் ஆண்டு ஆவணப்படமான ‘கண்ணியத்திற்கு ஒரு பாதை: மனித உரிமைக் கல்வியின் சக்தி’ என்ற படத்தின் திரையிடலின் போது இந்த மன்றத்தில் உரையாற்ற இருக்கின்றார்.
- இந்த ஆவணப் படத்தில் சாதி மற்றும் பாலின வேறுபாடு தொடர்பான பிரச்சினைகள் குறித்து இவர் பேசியிருந்தார்.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையத்தின் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## தொழில் துறை 4.0

- நாட்டில் தொழில் துறை 4.0 ஐ தொடங்குவதற்கான ஒரு முன்னோடித் திட்டமானது உத்தரப் பிரதேசத்தில் உள்ள நவீன ரயில் பெட்டித் தொழிற்சாலையில் தொடங்கப்பட்டுள்ளது.
- தொழில் துறை 4.0 ஆனது பொதுவாக நான்காவது தொழில் துறைப் புரட்சி என்று குறிப்பிடப்படுகின்றது.
- உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக உற்பத்தி தொழில்நுட்பங்களில் எந்திரமயமாக்கம், இடை-இணைப்பு மற்றும் தரவு பரிமாற்றம் ஆகியவற்றின் தற்போதைய போக்கிற்காக இந்தப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.
- தொழில் துறை 4.0 ஆனது செயற்கை நுண்ணறிவு, பெருந் தரவு, பகுப்பாய்வு, இயந்திரக் கற்றல் மற்றும் மேகக் கணினி (Cloud Computing) ஆகியவற்றுடன் “உற்பத்தியை” ஒருங்கிணைக்கின்றது.




## பள்ளி கல்வி தரக் குறியீடு

- நிதி ஆயோக் அமைப்பால் வெளியிடப்பட்ட பள்ளி கல்வி தரக் குறியீட்டில் (School Education Quality Index - SEQI) கேரளா மாநிலம் முதலிடம் பிடித்துள்ளது.

- SEQI ஆனது நிதி ஆயோக்கினால் ஒரு கூட்டு செயல்முறை மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.
    - மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம்
    - உலக வங்கி
- இந்தக் குறியீடானது பள்ளி கல்வித் துறையில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குறியீட்டுக்கான தரவானது மூன்று பிரிவுகளுக்காக சேகரிக்கப்பட்டுள்ளது: பெரிய மாநிலங்கள், சிறிய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள்.

*பெரிய மாநிலங்கள்*

- 2016 – 2017 ஆகிய ஆண்டுகளுக்கான குறியீட்டில் கேரளா 76.6 சதவீதத்துடன் முதலிடத்தையும் உத்தரப் பிரதேசம் 36.4 சதவீதத்துடன் கடைசி இடத்தையும் பிடித்துள்ளன.
- இந்தக் குறியீட்டில் ராஜஸ்தான் 72 சதவீதத்துடன் இரண்டாவது இடத்தையும் கர்நாடகா 70 சதவீதத்துடன் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

*சிறிய மாநிலங்கள்*

- இந்தக் குறியீட்டில் மணிப்பூர் (68.8 சதவீதம்) முதலிடத்தையும் அருணாச்சலப் பிரதேசம் (24.6 சதவீதம்) கடைசி இடத்தையும் பிடித்துள்ளன.

*யூனியன் பிரதேசங்கள்*

- இந்தக் குறியீட்டில் சண்டிகர் (82.9 சதவீதம்) முதலிடத்திலும் லட்சத் தீவுகள் கடைசி இடத்திலும் (31.9 சதவீதம்) உள்ளன.
- இந்தக் குறியீட்டில் ஹரியாணா, மேகாலயா, டாமன் & டையூ ஆகியவை அதிக முன்னேற்றம் அடைந்துள்ளன.

**NITI AAYOG EDUCATION QUALITY INDEX**

| Categories | Top 3 | Bottom 3 |
|---|---|---|
| Large states | Kerala, TN and Haryana | Telangana, Bihar, Jharkhand |
| Small states | Tripura, Goa, Manipur | Meghalaya, Nagaland, Arunachal Pradesh |
| Union Territories | Chandigarh, Delhi, Puducherry | Dadra & Nagar Haveli, Andaman Islands, Lakshwadeep |


# சர்வதேசச் செய்திகள்

## ஜி5 சஹேல் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் தீவிரவாதம்

- ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் 2019 ஆம் ஆண்டில் அல்கொய்தாவும் இஸ்லாமிய அரசு அமைப்பும் சஹேல் பிராந்தியத்தில் தங்கள் நிலைகளைப் பலப்படுத்தியுள்ளதாக எச்சரித்துள்ளார்.
- ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள பின்வரும் நாடுகளைக் கொண்ட குழுவானது சஹேல் நாடுகள் என்று அழைக்கப் படுகின்றது.

- புர்கினா பாசோ
- நைஜர்
- சாட்
- மாலி
- மவுரித்தானியா

❖ 2017 ஆம் ஆண்டில், பிரான்சின் ஆதரவுடன், கிளர்ச்சியாளர்களை எதிர்த்துப் போராடுவதற்காக ஜி5 சஹேல் பணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மறக்கப்படுவதற்கான உரிமை – இணையம்

❖ ஐரோப்பிய சட்டத்தின் கீழ் ‘மறக்கப்படுவதற்கான உரிமை’ என்று அழைக்கப்படும் நிகழ்நேர (ஆன்லைன்) தனியுரிமை விதியானது ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் எல்லைகளுக்கு அப்பால் பொருந்தாது என்று ஐரோப்பிய நீதிமன்றம் (European Court of Justice - ECJ) தீர்ப்பளித்துள்ளது.

❖ இணையத்தின் மீதான ‘மறக்கப்படுவதற்கான உரிமையானது’ தங்களின் தனிப்பட்டத் தரவுகளை நீக்குமாறு நிறுவனங்களிடம் கேட்க “தனி நபர்களுக்கு” அதிகாரம் அளிக்கின்றது.

❖ இது ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுத் தரவுப் பாதுகாப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தினால் வழங்கப்படுகின்றது. இது 2018 ஆம் ஆண்டில் 28 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிறைவேற்றப்பட்டது.

### *செயல்பாடு*

❖ கூகுள் போன்ற ஒரு தேடு பொறி நிறுவனம், தனியுரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை நீக்குமாறு பயனர்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெறுகின்றது.

❖ இது ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நாடு சார்ந்த இணைய இணைப்புகளை முதலில் மதிப்பாய்வு செய்து, பின்னர் அவற்றை நீக்குகின்றது.

# மாநிலச் செய்திகள்

## ERSS - 112 மற்றும் பிரகார் குற்றத் தடுப்பு வாகனங்கள் – தில்லி

- மத்திய உள்துறை அமைச்சகமானது தில்லியில் அவசர காலப் பதிலெதிர்ப்பு ஆதரவு அமைப்பின் (Emergency Response Support System / ERSS -112) உதவி எண் மற்றும் பிரகார் (PRAKHAR) என்ற தெருவோர குற்றத் தடுப்பு ரோந்து வாகனங்கள் ஆகியவற்றை தில்லியில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- காவல் துறை, தீயணைப்பு மற்றும் அவசர கால ஊர்தி போன்ற அவசர சேவைகளுக்காக, நாடு தழுவிய, ஒற்றை அவசர எண்ணாக ERSS - 112 என்ற உதவி எண் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இது இதர மூன்று அவசர கால உதவி எண்களைப் படிப்படியாக நீக்க இருக்கின்றது.
- அவசர கால சேவைகளுக்கான இந்த ஒற்றை எண்ணானது ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள "112" என்ற எண் மற்றும் அமெரிக்காவில் உள்ள "911" என்ற எண் ஆகியவற்றைப் போன்றது.
- ERSS - 112ஐ ஏற்றுக்கொண்ட 19வது மாநிலம் / ஒன்றியப் பிரதேசமாக புது தில்லி உருவெடுத்துள்ளது.
- பிரகார் என்பது, குற்றம் நிகழும் முக்கியமான இடங்களில் ரோந்து செல்வதற்காகத் தொடங்கப்பட்ட ஒரு தெருவோர குற்றத் தடுப்பு ரோந்து வாகனமாகும்.
- பிரகார் வாகனங்கள் வழக்கமான ரோந்து வாகனங்களிலிருந்து வேறுபடுகின்றன. ஏனெனில் இந்த வாகனங்கள் அதிக ஆயுதங்களைக் கொண்டு செல்கின்றன. மேலும் இவை நவீன தொழில்நுட்பத்துடன் பொருத்தப்பட்டுள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2018 ஆம் ஆண்டின் சரஸ்வதி சம்மன் விருதுகள்

- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவரான வெங்கையா நாயுடு புகழ்பெற்ற 28வது சரஸ்வதி சம்மன் விருதினை தெலுங்கு மொழிக் கவிஞரான கே. சிவா ரெட்டிக்கு வழங்கினார்.
- பக்காக்கி ஒட்டிகிலைட் (Turning Aside While Lying Down) என்ற தலைப்பைக் கொண்ட அவரது கவிதைத் தொகுப்பிற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- இந்தக் கவிதைத் தொகுப்பானது 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

***இந்த விருது பற்றி***

- இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள 22 மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியில் எழுதப்பட்ட ஒரு சிறந்த உரைநடை அல்லது கவிதை இலக்கியப் படைப்புகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் இந்த விருது வழங்கப்படுகின்றது.
- சரஸ்வதி சம்மன் விருதானது 1991 ஆம் ஆண்டில் கே.கே. பிர்லா அறக்கட்டளையால் நிறுவப்பட்டது.
- இந்த விருதானது 15 லட்சம் மதிப்புள்ள ரொக்கப் பரிசைக் கொண்டுள்ளது.

## பண்டிட் ஜஸ்ராஜ்

- சர்வதேச வானியல் ஒன்றியமானது இந்திய இந்துஸ்தானிப் பாடகரான பண்டிட்

ஜஸ்ராஜின் நினைவாக, 2006 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட சிறு கோள் ஒன்றிற்கு அவருடைய பெயரை சூட்டியுள்ளது.

- இந்த சிறு கோள் அல்லது சிறிய கிரகமானது செவ்வாய் கிரகத்திற்கும் வியாழனுக்கும் கிரகத்திற்கும் இடையில் அமைந்துள்ளது.
- இது அமெரிக்காவில் உள்ள கேட்டலினா வான் ஆய்வகத்தினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ஒரு கிரகத்திற்கு பெயரிடும் உரிமை முதலில் கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. அவர்கள் ஒரு பெயரை முன்மொழிய 10 ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

***இதுபற்றி***

- சங்கீத் மார்டண்ட் பண்டிட் ஜஸ்ராஜ் (பி. 1930) என்பவர் இந்துஸ்தானி இசையில் பிரசித்திப் பெற்ற கலைஞர் ஆவார்.
- மதிப்புமிக்க பத்ம விபூஷண் மற்றும் சங்கீத நாடக அகாடமி விருது உட்பட ஏராளமான விருதுகள் மற்றும் கௌரவப் பட்டங்களை இவர் பெற்றுள்ளார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★